[1978 செப்டம்பர் 8

## தருமபுரி மாவட்டத்தில் பால் சேகரிப்புச் சங்கங்கள்

* வின 98—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பால்வள வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள பால் சேகரிப்பு சங்கங்கள் எத்தனே?

(ஆ) இன்னும் எத்தனே சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) தர்மபுரி மாவட்டத்தில் தற்பொழுது 150 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) 31-3-1979 வரையிலான நடப்பு ஆண்டில், மேலும் 100 முதல் 150 வரை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, உருவாக்கப் பட்ட பல சங்கங்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதோடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சீஃப் ப்ரொமோட்டர் என்ற பதவி ஏற்படுத்தப்படுமா, அந்த வகையில் தர்மபுரி மாவட்டத்திற்கும் நியமிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட 150 சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் 100 முதல் 150 சங்கங்களை 1979 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன்படி இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட இருக்கின்ற காரணத்தால் தாமதம் ஏற்படுவது என்பது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. மேலும் இந்த சீஃப் ப்ரொமோட்டர்கள் அமைப்பது பற்றிய விஷயத்தை அரசு பரிசீலித்து வருகின்றது. பரிசீலித்த பின் விரைவிலே தர்மபுரி மாவட்டத்திலேயும் ஒரு சீஃப் ப்ரொமோட்டர் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சித்த வைத்தியம் பற்றிய சுவடிகள் முதலியன.

* வின 99—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சித்த மருத்துவம் பற்றிய கிடைப்பதற்கரிய கையெழுத்துப் பிரதிகளேயும் ஒலைச் சுவடிகளையும் அச்சுப் பிதிரகளேயும் சேகரிப்பதற்கென அரசு ஒரு குழுவை அமைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை அக்குழு கண்டுபிடித்தவைகளின் விபரம் என்ன?

1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர், சௌந்திரராஜன் ;

(அ) ஆம்.

(ஆ) இக் குழு இதுகாறும் கீழ்க்கண்டவைகளைத் திரட்டியுள்ளது:—

(1) சித்த மருத்துவ அரிய அச்சிட்ட நூற்கள்—561

(2) சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் (பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியிலிருந்து வரப்பெற்றவையும் சேர்த்து) —360

(3) சித்த மருத்துவ கையேட்டுப் பிரதிகள் — 84

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அரசுக்கு இது வரை கிடைத்த ஓலைச்சுவடிகள் போன்றவற்றை அரசு அந்தக் குழுவின் மூலம் பரிசீலனை செய்ததா? அவ்வாறு பரிசீலனை செய்து அவற்றை எந்தெந்த வகையிலே பயன்படுத்தி இருக்கிறது. பயன் படுத்த இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே அவற்றைப் பரிசீலனை செய்த பின் அவற்றை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற முறையில் இன்றைக்கு அந்த குழு பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க, அன்பழகன் ; தலைவரவர்களே, இப்போது அமைச்சரவர்கள் தெரிவித்த அந்த ஏடுகள் ஏதாவது 1975-வது ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு பின்னாலே அந்தக் குழுவினாலே பெறப்பட்டிருக்கின்றனவா? அந்தக்குழு 1976-வது ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பின்னாலே பணியாற்றி இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அதைப் பற்றிய விளக்கம் இங்கே தரப்படவில்லை, ஆகவே தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள்.

* வின 100 திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புறங்களில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாள் முழுவதும் மருத்துவர்கள் இருந்து பணியாற்றுகிறார்களா ?

(ஆ) முழு நேரமும் மருத்துவர்கள் இருந்து பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?